திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ஆணை
முன்னிலை: திரு.மா.பிரதீப் குமார், இ.ஆ.ப.,

ந.க.அ3/22048/2020 நாள்: 04.11.2024

பொருள்:: பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகு - மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் - முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.பி.ராமர் பணியிடையே காலமானது - மகள் திருமதி.ரா.தீப்பிரியா என்பவருக்கு கருனை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து - ஆணையிடல்.

பார்வை::

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.கஅ4/22048/2020 நாள்: 29.12.2020.
2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க அ3/19/2021 நாள்: 07.01.2021.
3. இவ்வலுவலக கடிதம் ந.க.அ3/22048/2020 நாள்: 30.12.2022 மற்றும் 18.11.2023.
4. அரசாணை எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1)த் துறை, நாள்: 08.03.2023.
5. அரசு செயலாளர், மனித வள மேலாண்மைத் (G2) துறை கடித எண்.5532/G2/2023-1 நாள்: 20.09.2023.
6. சென்னை, கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களது கடித எண்.ஆ.கு.3/4600/2024 நாள்: 20.02.2024.

******

ஆணை:

திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகு, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து பணியிடையே 16.01.2019 அன்று காலமான திரு.பி.ராமர் என்பவரது மகள் திருமதி.ரா.தீப்பிரியா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் பெற அனைத்து தகுதிகளையும் பெற்றிருந்ததால், பார்வை 1 மற்றும் 2-ல் காணும் செயல்முறைகள் ஆணையின்படி கருணை அடிப்படையின்கீழ் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணி நியமனம் வழங்கப்பட்டு, 08.01.2021 முற்பகல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார். தலியரது பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 08.01.2021 முற்பகல் வரன்முறை செய்து அரசிடமிருந்து ஆணை பெற்றுத்தரக் கோரி பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக கருத்துருக்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நேர்வில், அரசாணை எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1)த் துறை, நாள்: 08.03.2023 மற்றும் அரசு செயலாளர், மனித வள மேலாண்மைத் (G2) துறை கடித எண்.5532/G2/2023-1 நாள்: 20.09.2023-ல் கருணை அடிப்படையின் கீழ் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்ய வழிகாட்டுதல்கள் மற்றும் தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதால் இதனடிப்படையில், பணிவரன்முறை செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள பார்வை 6-ல் காணும் சென்னை, கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 4-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 5-ல் காணும் அரசு கடிதத்தின்படி விதித்தளர்வு ஏதும் தேவையில்லை என்பதால் திருமதி.ரா.தீபப்பிரியா இளநிலை வருவாய் ஆய்வாளர் என்பவருக்கு தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையில் பணிநியமனம்) விதிகள்-2023-ன்படி கீழ்க்கண்டவாறு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண்பருவம் துவங்கி விளம்புகை செய்தும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி.ரா.தீபப்பிரியா,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>தனி வட்டாட்சியர் (ஆதிந) அலுவலகம்,<br>துறையூர். | 08.01.2021 முற்பகல் | 08.01.2021 முற்பகல் |

மாவட்ட ஆட்சியருக்காக,
மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது),
திருச்சிராப்பள்ளி.

பெறுநர்:
திருமதி.ரா.தீபப்பிரியா,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
தனி வட்டாட்சியர் (ஆதிந) அலுவலகம்,
துறையூர்.

04/11/2024

நகல்: கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-05. (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

நகல்: தனி வட்டாட்சியர் (ஆதிந), துறையூர்.

(தனியரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டு)

நகல்: அ3-இருப்பு கோப்பு.